# பாரதி விழா அறிக்கை.

(2018-2019)

தமிழ்த்தாயின் தவப்புதல்வனாய்த் தரணியில் புதுக்கவிதைகள் பல புனைந்து புத்தொளியூட்டிய நம் தேசியக்கவியின் புகழொளியை நினைவு கூறும் வகையில் எம் பள்ளியில் அவர் பிறந்தநாள் விழா 11.12.2018 அன்று காலை 10.30 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது. பாரதிவிழாவின் அறக்கொடையாளர் Dr. திரு. R.S. முரளி அவர்களின் தலைமையில் சிறப்பு விருந்தினர் திரு. செந்தில்குமார், மற்றும் திருமதி. அம்சா ராமதாஸ் போன்றோரும் பங்கு பெற, விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சி இறைவணக்கத்துடன் தொடங்கியது 'பாரத சமுதாயம் வாழ்கவே!' என்ற தலைப்பில் மாணவர்கள் சேர்ந்திசை நிகழ்த்தினர். 'விடுதலை! விடுதலை!' என்ற பாரதியின் பாடலுக்கு மாணவிகள் நடனம் ஆடிக் கண்களுக்கு விருந்து படைத்தனர். 'பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரதநாடு' என்ற மையக் கருத்தினை வலியுறுத்தி எங்கள் மாணவர்கள் நிகழ்த்திய நாடகம் எங்களையும் விழாத்தலைவரையும் பரவசப்படுத்தியது. பேச்சுப் போட்டியில் வென்ற மாணவியும் தம் கருத்துகளை எங்களோடு பகிர்ந்து கொண்டார்.

விழாத்தலைவர் போட்டிகளில் பங்கேற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசினை வழங்கிப் பாராட்டினார். பாரதியின் கருத்துகளைப் பின்பற்றி வாழ வேண்டும் என்றும் அறிவுரை பகர்ந்தார். அவரைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர்கள் திரு. செந்தில்குமார், திருமதி. அம்சா ராம்தாஸ் ஆகியோர் தத்தம் கருத்துகளையும் வழங்கினர்.

பள்ளியின் சார்பாக விருந்தினர்களுக்கு நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது. விழாவிற்கு வருகை புரிந்த அனைவருக்கும் நன்றி கூற, நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நடந்தேறியது.












**Roving Reporters**
**KKN**